# தமிழ்நாடு திருநாள்...! முதல்வர் வலைதளப் பதிவு!

முதல் பக்கத் தொடர்ச்சி

"தமிழ்நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டுங்கள்! என்று வேண்டி, 72 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து மறைந்தார் விருதுநகர் தியாகி சங்கரலிங்கனார்! தமிழ்நாடு கேட்டுப் போராடுபவர்களை 'நான் சென்ஸ்' என்று சொன்னதை எதிர்த்து மும்முனைப் போராட்டம் நடத்தியது திராவிட முன்னேற்றக் கழகம். நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கானவர்கள், பல மாதங்கள் சிறை வைக்கப்பட்டார்கள். தூத்துக்குடியில் நான்கு பேர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார்கள். இறுதியாக, திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சியில் அமர்ந்த காரணத்தால்தான், தாய்த் தமிழ்நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டது.

**'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டிய அண்ணா!**

காஞ்சி தந்த காவியத் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்ததால்தான் தாய்த் தமிழ்நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டது.

1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி.மு.க ஆட்சி அமைந்தபிறகு, 1968 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் நாள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டப்பட்டது. தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத் தீர்மானம் நிறைவேற்றிய வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நன்னாளில், 'தமிழ்நாடு வாழ்க' என வாழ்த்தி முழக்கமிட்டார் பேரறிஞர் அண்ணா! சட்டமன்றத்தில் இருந்த அனைவரும் பதிலுக்கு 'தமிழ்நாடு வாழ்க' என மூன்று முறை உணர்ச்சி மேலிடக் குரல் எழுப்பினார்கள்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!**

"தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்று அண்ணா பெயர் சூட்டிய ஜூலை 18ஆம் தேதி, தமிழ்நாடு நாளாகக் கொண்டாடப்படும்" என்று கடந்த 2021ஆம் ஆண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற நமதியக்கம் மட்டும் உருவாகாமல் போயிருந்தால், தமிழ்நாட்டில் இந்த இயக்கம் ஆட்சிக்கு வராமல் போயிருந்தால், இந்த மாநிலத்திற்கு இன்று வரையில் தமிழ்நாடு என்ற பெயர் சூட்டப்படாமலேயே இருந்திருக்கும் என்றால் அது மிகையில்லை!

**'வாழ்விலோர் திருநாள்!'**

உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம் போல இதுவும், 'சென்னைப் பிரதேசம்' என்று அடையாளமற்ற மாநிலமாகத்தான், இன்று வரை இருந்திருக்கும்... வரலாற்றுப் பெருமை கொண்ட நமது தமிழினம் வாழ்ந்த நிலப்பரப்புக்கு, 'தமிழ்நாடு' என்ற பெயர் இல்லாவிட்டால், அது அவமானம் அல்லவா? அந்த அவமானம் துடைக்கப்பட்ட நாள்தான், இந்த ஜூலை 18ஆம் நாள்!

முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் வந்ததால்தான் "தமிழ்நாடு நாள்" என்ற உணர்ச்சி மிகு நாள் கிடைத்தது. இது வெறும் நாளல்ல, வாழ்விலோர் திருநாளாக உணர்ச்சி மிகு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி பதிவு!**

இந்நாளில் முதல்வர் அவர்கள் வெளியிட்ட காணொலியில், முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

**"கடல் கண்டு, மலை கண்டு<br>பெயர் கொண்ட<br>தமிழ்நாடு வாழ்க!**

**களங் கண்டு கலை கண்டு<br>கவி கொண்ட<br>தமிழ்நாடு வாழ்க!**

**உடல் கொண்டு உரங்கொண்டு<br>உயிர் கண்ட<br>தமிழ்நாடு வாழ்க!**

**ஜூலை 18 - 'தமிழ்நாடு நாள்' - 'தமிழ்நாடு திருநாள்' என்று சொல்லும் போதே நமது உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஒரு ஆற்றல் பிறக்கிறது.**

**தமிழ்நாடு வாழ்க!<br>தமிழ்நாடு வாழ்க!<br>தமிழ்நாடு வாழ்க!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

---

### தமிழ்நாட்டு மீனவர்கள் சிறைப்பிடிப்பு! ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# இராமேஸ்வரத்தில் மீனவச் சங்கங்கள் சார்பில் இன்று ஆர்ப்பாட்டம்!

### "இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தினர் பங்கேற்பீர்!" காதர் பாட்சா முத்துராமலிங்கம் அறிக்கை!

இராமநாதபுரம், ஜூலை 19-

இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இராமநாதபுரம் உள்ளிட்ட தமிழ்நாடு கடலோர மாவட்டங்களில் மீன்பிடி தொழில் செய்து வரும் விசைப்படகு மீனவர்கள் மற்றும் நாட்டுபடகு மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கின்ற வகையில் மீன்பிடி தொழில் செய்து வரும் மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் இலங்கைக் கடற்படை தொடர்ந்து கைது செய்து வருகின்றது.

இது போன்று தொடர்ந்து அத்துமீறலில் ஈடுபட்டுவரும் இலங்கை அரசைக் கண்டிக்காமல் தொடர்ந்து வேடிக்கை பார்த்தும், மீனவர்களை வஞ்சித்தும், பாராமுகத்துடன் செயல்பட்டு வரும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசினை கண்டிக்கின்ற வகையில் இன்று (19.07.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு இராமேஸ்வரம் பேருந்துநிலையம் அருகில் அனைத்து மீனவ சங்கங்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.



இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு தி.மு.க. எப்போதும் மீனவப் பெருங்குடி மக்களின் அரணாகவும், தோழனாகவும் எப்போதும் இருக்கும் என்கிற வகையில் மேற்கண்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. சார்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக, கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### பல்கலைக்கழகங்களின் வேந்தர் பொறுப்பிலிருந்து ஆளுநரை நீக்கும்

# பஞ்சாப் மாநில அரசின் மசோதாவை திருப்பி அனுப்பினார் குடியரசுத் தலைவர்!

### சட்டப்பேரவையில் மீண்டும் மசோதாவை தாக்கல் செய்ய அரசு திட்டம்!

சண்டிகர், ஜூலை 19-

பஞ்சாப் பல்கலைக் கழகங்களின் வேந்தர் பொறுப்பிலிருந்து ஆளுநரை நீக்கும் மசோதாவை குடியரசு தலைவர் திருப்பி அனுப்பியுள்ள நிலையில், அதனை மீண்டும் சட்டமன்றத்தில் தாக்கல் செய்வதா? அல்லது உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதா என பஞ்சாப் அரசு தீவிர ஆலோசனை நடத்தி வருகிறது.

பா.ஜ.க., அல்லாத கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் பல்கலைக்கழக நியமனங்களில் ஆளுநர்களின் தலையீடு அதிகமாக உள்ளது. இதனால் தமிழ்நாடு உட்பட பல மாநிலங்கள் வேந்தர் பொறுப்பில் இருந்து ஆளுநரை நீக்கும் மசோதாவை நிறைவேற்றியுள்ளன.

பஞ்சாப் மாநிலமும் பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதாவை கடந்த ஆண்டு நிறைவேற்றியது. அதற்கு நீண்ட நாளாக ஆளுநர் ஒப்புதல் வழங்காததால் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. ஆளுநர்கள் எந்த மசோதாவையும் காரணமில்லாமல் நீண்ட நாட்கள் கிடப்பில் வைத்திருக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் கடந்த ஆண்டு தீர்ப்பு வழங்கியது.

இதனை தொடர்ந்து டிசம்பர் மாதம் பஞ்சாப் மாநில மசோதாவை அம்மாநில ஆளுநர் குடியரசு தலைவருக்கு அனுப்பி வைத்தார்.

இந்நிலையில், குடியரசுத் தலைவர் அந்த மசோதாவுக்கு ஒப்புதல் வழங்காமல் தற்போது ஆளுநருக்கு திருப்பி அனுப்பி உள்ளார். ஆளுநர் அதனை அரசுக்கு திருப்பி அனுப்பி உள்ளார்.

இதனால் மீண்டும் மசோதாவை சட்டமன்றத்தில் நிறைவேற்றுவதா? அல்லது உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதா என்பது குறித்து பஞ்சாப் ஆம் ஆத்மி அரசு தீவிர சட்ட ஆலோசனை நடத்தி வருகிறது.




---



# 'சிலந்தி' பதில்கள்!



**கேள்வி:** விக்கிரவாண்டி இடைத்தேர்தல் முடிவு எதைக் காட்டுகிறது?

**பதில் :** **சாதிய அரசியலுக்குச் சம்மட்டி அடி!**

**சதிகார அரசியலுக்குச் சாவுமணி!**

**உண்மை, உழைப்புக்கு உத்வேகம்; உந்து சக்தி!**

**கேள்வி:** விக்கிரவாண்டி இடைத்தேர்தல் முடிவுக்குப் பின் மருத்துவர் அய்யா ராமதாஸ் மற்றும் அவரது மகன் அன்புமணி ஆகியோரின் நிலை என்ன?

**பதில்:** **இந்த முடிவை பெரிய அய்யாவும், சின்ன அய்யாவும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்; தோல்வியா அது; ஏமாற்று அரசியல் நடத்தி அடிக்கடி நிறம் மாறும் அரசியல்வாதிகளுக்கு மக்கள் தந்த மரண அடி! பெரிய அய்யாவுக்கும் சின்ன அய்யாவுக்கும் தோல்வியால்கூட பெரிய வருத்தம் இருந்திருக்காது; இந்த தோல்வியால் இனிவரும் தேர்தல்களில் பேரத்தை பெரிய அளவில் நடத்த முடியாதே என்ற கவலைதான் பெரிதாக இருந்திருக்கும். 'பேரம்' என்றதும் வேறு பொருள் கொண்டுவிடாதீர்கள். நாம் குறிப்பிடுவது அவர்களுக்கான 'சீட்' பேரத்தை தான்!**

**கேள்வி:** விக்கிரவாண்டி இடைத்தேர்தலிலிருந்து பல பாடங்களைக் கற்றுக் கொண்டதாக அன்புமணி (சின்ன அய்யா) கூறியுள்ளாரே?



**பதில்:** **'பலரை சில காலம் ஏமாற்றலாம்; சிலரை பல காலம் ஏமாற்றலாம்; ஆனால் எல்லாரையும் எல்லா காலமும் ஏமாற்ற முடியாது' - என்ற பாடம், அவர் கற்ற பல பாடங்களில் ஒன்றாக இருக்குமெனக் கருதுகிறோம்.**



**கேள்வி :** 'ஓ.பி.எஸ்., சசிகலா, தினகரனுக்கு தனது அ.தி.மு.க.வில் இடமில்லை' என திட்டவட்டமாக எடப்பாடி பழனிச்சாமி கூறிவிட்டாரே!

**பதில் :** **எடப்பாடி பழனிச்சாமி 'எத்தருக்கு எத்தர்' என்பதை பல கட்டங்களில் நிரூபித்தவராயிற்றே! கட்டுச் சோற்று மூட்டையில் பெருச்சாளிகளை வைத்துக் கட்டிக் கொள்ள அவர் ஏமாளியா; என்ன?**

**கேள்வி:** என்னுடைய 'என்ட்ரி' (Entry) ஆரம்பமாயிடுச்சி... இனிமே பார்க்குறதே வேற..., என்று கூறிய சசிகலா தனது 'என்ட்ரி'யை ஆரம்பித்துவிட்டாரே?



**பதில் :** **"கிளம்பிட்டாங்கய்யா... கிளம்பிட்டாங்க'ன்னு வடிவேலு ஒரு படத்தில் பேசிய வசனம்தான் இந்தப் புதிய 'கிளம்பல்'களைப் பார்க்கும்போது நமது நினைவில் நிழலாடுகிறது! ஓ.பி.எஸ்., ஈ.பி.எஸ். நடத்திய பல அரசியல் காமெடிகளைப் பார்த்துச் சலித்துப் போன தமிழ்நாட்டு மக்கள் இனிவரும் காலங்களில் புதிய காமெடிகளைக் காணலாம்! புரட்சித் தாயும், புரட்சித் தமிழரும் நடத்திடும் சரவெடிக் காமெடிகளுக்குப் பஞ்சம் இருக்காது!**

**கேள்வி:** ஆன்லைனில் மது விற்பனை செய்தால் போராட்டம் நடத்தப் போவதாக மருத்துவர் ராமதாஸ் கூறியுள்ளாரே!

**பதில்:** **மருத்துவர் அய்யா இப்போது கனவுலகிலே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார் போலும்! 'அப்படி ஒரு திட்டம்; அதாவது ஆன்லைன் மது விற்கும் திட்டம் எதுவும் இல்லை' என டாஸ்மாக் நிர்வாகம் தெளிவாகத் தெரிவித்துவிட்டது! விக்கிரவாண்டி தேர்தல் படுதோல்விக்குப் பிறகு, தன்னோடு இருக்கும் கொஞ்ச நஞ்சத் தொண்டர்களைப் பாதுகாத்துக் கொள்ள, இல்லாத ஒன்றை இவரே சிருஷ்டித்துக் கொண்டு அதனை எதிர்த்து அறிக்கை விட்டு, இருப்பைக் காட்டிக் கொள்கிறாரோ; என்னவோ?**

**கேள்வி:** அரசியல் சட்டம் 370 வது பிரிவு நீக்கத்திற்குப் பிறகு, பிரதமர் மோடி கூறியபடி ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதம் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டதா?

**பதில்:** **கடந்த ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து இன்று வரை காஷ்மீரின் ஜம்மு பிராந்தியத்தில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களில் இராணுவ கேப்டன் உட்பட 12 பாதுகாப்புப் படையினரும் 10 பொதுமக்களும் பலியாகி உள்ளனர்.**



**இந்த ஜூலை மாதம் 7 ஆம் தேதி ராஜபுரி மாவட்டத்தில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் ஒரு போலீஸ்காரர் காயம் அடைந்துள்ளார். ஜூலை 8 ஆம் தேதி கதுவா மாவட்டத்தில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 5 இராணுவ வீரர்கள் பலி ஆகி உள்ளனர். பலருக்குக் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஜூலை 15 ஆம் தேதி தோடா மாவட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் இராணுவ கேப்டன் உட்பட 4 இராணுவ வீரர்கள் பலி ஆகி உள்ளனர்!**

**370 வது பிரிவை நீக்கியபோது பிரதமர் மோடி என்ன பேசினார் என்பதை எண்ணிப்பாருங்கள்! 'காஷ்மீர், பயங்கரவாத சக்திகளிடமிருந்து மீட்டெடுக்கப்படும்; அமைதிப் பூங்காவாக மிளிரும்' என்றும், 'மீண்டும் அங்கே திரைப்படப்பிடிப்புகள் தொடங்கும்.' - 'இது மோடியின் உத்தரவாதம்' என்றெல்லாம் முழங்கினார்.**

**இப்போதும் அங்கே பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்கதைகளாகின்றன. நமது இராணுவ கேப்டன் உட்பட பல வீரர்கள், அப்பாவி மக்கள் பலியாகியுள்ளனர்.**

**மணிப்பூர் பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதத் தாக்குதல்களால் பதட்டநிலை - நடுக்கத்தில் நாட்டின் எல்லைப் பகுதிகள் உள்ளன. இந்த நிலையில் பிரதமரோ மூன்றாவது முறை பதவி ஏற்றபின் இந்தக் குறுகிய காலத்தில் மூன்று நாடுகளுக்குச் சென்று வந்துவிட்டார்... கவலையில்லா மனிதர்!**